# நித்திய வாழ்வும், நித்திய தண்டனையும் !

## Eternal Life & Enternal Punishment !

Philemon Rajah




தமிழ், ஆங்கில தபால்வழி பைபிள் பாடங்கள், பத்திரிக்கைகள் பெற

**கிருபையுள்ள வார்த்தை**

தபால் பெட்டி – 15, அரசரடி, மதுரை – 625 016.

போன் : 92 4421 4421, 92 4431 4431 Email : obey2jesus@gmail.com


## நித்திய வாழ்வும் ! நித்திய தண்டனையும் !

தேவனைப் பற்றி நாம் வேதத்தில் தியானம் செய்யும் போது, வேதாகமத்தின் கடவுள் என்பவர் மனிதனுக்கு கொடுக்க கூடிய விஷயங்களில் இரண்டு முக்கியமான காரியங்கள் உண்டு. ஒன்று நித்தியமான வாழ்வு; இன்னொன்று நித்தியமான தண்டனை. அதாவது நித்தியமான வெகுமதி அல்லது நித்தியமான தண்டனையாக இருக்கிறது. தேவனைப் பற்றி பொதுவாக மக்களுடைய மனதிலிருக்கும் கருத்துக்கள் என்னவென்றால், 'கடவுள் என்பவர் அன்புள்ளவர் தானே, அவர் அப்படி தண்டிப்பாரா? நித்தியமான தண்டனை தருவாரா? அப்படியே தண்டித்தாலும் கொஞ்ச நாளைக்குத்தான் தண்டிப்பார். உண்மையிலே, நெருப்புல தூக்கி போடுவாரோ?' என்றும் சிலபேர் நினைத்துக் கொள்கிறார்கள். மனிதனின் நம்பிக்கை இப்படியெல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. இதனைப் பற்றி வேதாகமம் என்ன சொல்லுகிறது? என்பதை நாம் கவனிப்போம்.

### 1. தேவன் அன்புள்ளவர் மாத்திரமல்ல.

ரோமர் 11:22, "ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார். விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்தில் தயவையும் காண்பித்தார். அந்தத்தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும், நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய்". தேவன் கண்டிப்புள்ளவர் என்பதனை மறந்து விடாதீர்கள். பைபிளை படியுங்கள், தேவனைத் தேடுங்கள்; வேத ஆராய்ச்சிக்கு போங்கள். ஆத்தும ஆதாயப்பணியில் ஈடுபடுங்கள் என்று மீண்டும் மீண்டும் ஏன் சொல்லப்படுகிறது. சில நேரத்தில் வாலிபப் பிள்ளைகள் சொல்வார்கள், "இவர்களுக்கு இதே வேலை! ஆராதனைக்கு போ, பைபிள் படி, தேவனுக்கு பயப்படு என்றே சொல்லிக் கொண்டேயிருப்பார்கள்''. இது மீண்டும் மீண்டும் ஏன் சொல்லப்படுகிறது? கொஞ்சம் கவனித்து பாருங்கள்! 'வாலிப வயதில் உலகத்தை அனுபவிப்பதை விட்டு விட்டு, இதை எல்லாம் சொல்லி ஏன் பயமுறுத்துகிறீர்கள்' என்று நீங்கள் ஒருவேளை கேட்கலாம்; அன்பானவர்களே நாங்கள் உங்களை பயமுறுத்தவில்லை. மாறாக தேவ எச்சரிப்பை கூறுகிறோம்.

சாலையில் போய்க் கொண்டேயிருக்கிறோம். அங்கு ''அபாயம்'' என்று எழுதி, ஒரு மண்டை ஓடு படம் வரையப்பட்டிருக்கிறது. அப்பொழுது, 'அடிபட்டு கீழே விழுந்து விடுவேன் என்று என்னை பயமுறுத்துகிறார்கள்', என்று நாம் நினைத்தால் அது சரியான சிந்தனையாக இருக்குமா? என்று



சிந்தித்து பாருங்கள். அதாவது, 'இந்த பாதை சரியில்லை பழுதடைந்துள்ளது. ஆகையால், நீங்கள் இந்த பாதையில் போகாதீர்கள்' என்று எச்சரிக்கை கொடுத்து நம்மை தடுக்கிறார்கள்.

தேவன் என்பவர் கண்டிப்புள்ளவர். மறந்து விடாதீர்கள்!

### 2. தேவன் விழுந்து போனவனுக்கு தயவையும், சரியில்லாதவனை கண்டிக்கிறவருமாய் இருக்கிறார்.

**லேவியராகமம் 10:1-3** வசனங்களை வாசித்துப் பாருங்கள். நாதாப், அபியூப் என்று இரண்டு பேர் வேதாலயத்தில் பணி செய்தார்கள். தேவன் அவர்களை அழைத்து, தேவாலயத்து ஒழுங்கு முறைகளை அவர்களுக்கு முன்பு இருந்தவர்கள் செய்தது போல் செய்யும்படி சொல்லிக் கொடுத்துவிட்டார். இவர்கள் அவசரத்திற்கு அந்த ஒழுங்கு முறையினை மீறி, அந்நிய அக்கினியை தேவாலயத்திற்குள் கொண்டு வருகிறார்கள். இவர்கள் இருவரும் அங்கேயே இறந்து விடுகிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது.

நீங்கள் ஒருவேளை, 'சிறிய விஷயத்திற்கு இவ்வளவு பெரிய தண்டனையா?' என்று நினைக்கலாம். ஆமாம்! சின்ன விஷயத்திற்கும் அவர் தண்டிக்கிறவராயிருக்கிறார். பெரிய விஷயத்திற்கும் தண்டனை இருக்கிறது. இன்னொன்றை நினைவில் கொள்ளுங்கள். தேவனுடைய பார்வையில் **சிறிய பாவம், பெரிய பாவம்** என்ற **பாகுபாடு இல்லை.** பாவம் என்றால் பாவம் தான்!

"நான் நல்ல விஷயத்துக்கு தானே பொய் சொன்னேன்', 'நான் ஆபத்துக்கு தானே பொய் சொன்னேன்', 'இதற்கெல்லாம் தேவன் தண்டிக்கமாட்டார்' என்று நினைத்தால் ஏமாந்து போவோம்! ஏனென்றால் பொய்யில் வெள்ளை, கருப்பு என்றும்; கொஞ்சம், அதிகம் என்றும் தேவன் பாகுபாடு பார்ப்பதில்லை! பொய்யை பொய்யென்று அதற்கான தண்டனையைத் தருகிறார்.

அப்போஸ்தலர் 12-ம் அதிகாரத்தில் ஏரோதைப் பற்றி சொல்லியிருக்கிறது. அவனைப் பற்றி ஜனங்கள் எல்லோரும் தேவனுக்கு சமமாக அவனை புகழ ஆரம்பித்தவுடன், தன்னை தேவனுக்கு சமமாக நினைத்த நேரத்தில் சிம்மாசனத்திலிருந்து கீழே விழுந்து புழுபுழுத்து செத்தான். "நானும், கடவுளும் ஒன்று; என்னை கடவுளாக நினையுங்கள்" என்று மனிதன் தன்னை நினைத்துக் கொண்டால், நாம் தேவ மகிமையை மனிதனுக்கு கொடுக்க ஆரம்பித்தால், கடவுள் உடனே அடிப்பாராம். இவை எல்லாம் எதற்காக சொல்லப்படுகிறது; ஏனென்றால், தேவன்



தண்டிக்கவும் செய்வார். நாம் அந்த தண்டனையிலிருந்து தப்பிப்பது எப்படி என்று தெரிந்து கொண்டு கவனமாய் வாழ வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இயேசு சொல்கிறார், **யோவான் 6:53**ல், "அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்". தேவனுடைய பிள்ளைகளுக்கு வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தரின் பந்தியில் பங்கு பெறவேண்டும் என்பது கட்டளை. கல்யான வீட்டிற்கு, சாவு வீட்டிற்கு, விசேஷ வீட்டிற்கு போய் விட்டேன் என்று சொல்லி தவறவிட்டால், கர்த்தருடைய கட்டளையை உதாசீனம் செய்கிறோம். சபை கூடிவருதலை விட்டு விடாதிருங்கள் என்று வேதம் சொல்லுகிறது. ''கடவுள் கடவுள் என்று சொல்லிக் கொண்டிருந்தால், கடவுள் சோறு போட்டு விடுவாரா? போய் முதலில் வேலையைப் பாருப்பா'' என்று பெரிய புத்திசாலிகளெல்லாம் சொல்லுவார்கள். படிப்பை பார்க்க வேண்டும் தான், வேலையை பார்க்க வேண்டும் தான் இல்லை என்று அல்ல. ஆனால், தேவனா? உலகமா? என்று வரும்போது படிப்பு குப்பை தான்! வேலை ஒன்றுக்கும் இல்லை தான்! எல்லாம் இரண்டாம் தரம் தான்.

### 3. வாழ்வையும், தண்டனையையும் அவரே அளிக்கிறார் .

வேலை பார்க்கும் இடத்தில் கிறிஸ்தவ முதலாளியிடம், கிறிஸ்தவ வேலைக்காரன், 'தேவனுடைய காரியத்தில் ஈடுபட வேண்டும்' என்று கேட்டால் முதலில் வேலையை பாருப்பா என்று சொல்லக் கூடாது! தேவனுடைய விஷயத்திற்கு அனுமதி கொடுக்க வேண்டும். ஜீவனை கொடுக்கிறவர் தேவன். அவருடைய வார்த்தைக்கு கீழ்படிய வேண்டும். இல்லையென்றால் தண்டனை உண்டு.

**வெளிப்படுத்தல் 20:10** *'அவர்கள் இரவும் பகலும் சதாகாலமும் வாதிக்கப்படுவார்கள்'*. **வெளிப்படுத்தல் 22:5-லே**, *'அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்'.* இப்பொழுது புரிந்து கொள்ள முடிகிறதா? தேவனுடைய வெகுமதியும் சதாகாலமானது, தண்டனையும் சதாகாலமானது. இரவிலும் அக்கினியில் கிடப்போம்; பகலிலும் அக்கினியில் கிடப்போம். அல்லது, இரவும் பகலும் என்றென்றைக்கும் பரலோகத்தில் தேவனோடு வாழப் போகிற நித்திய வாழ்க்கை! இதற்கு முடிவில்லை.



அதைப் போல நித்தியமான தண்டனையும் தேவன் தருவார். மகா பயங்கரமான தண்டனையை தரப்போகிறார் என்கிற எச்சரிக்கை இ[illegible]தினாலே, இந்த தண்டனைக்குள்ளாக நாம் போய் மாட்டிக் கொ[illegible]க்கு, அவருடைய நித்திய வெகுமதியாகிய பரலோ[illegible]தில் நித்திய ஜீவனை பெற நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள, இந்த செய்தி நமக்கு அழைப்பு கொடுக்கிறது.

### 4. தேவனுக்காக வாழ்வதை உதாசீனம் செய்யாதீர்.

பிரியமானவர்களே! பைபிள் மிகத் தெளிவாய் சொல்லுகிறது, **மத்தேயு 18:8ஐ** வாசியுங்கள் ! இந்த பூமியில் தேவனுக்காக வாழ முயற்சி எடுக்கிற ஆவிக்குரிய காரியத்தில் ஈடுபட விரும்புகிற, சபைக்கடுத்த காரியத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிற, ஊழியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற, பைபிள் ஸ்டடிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்களுக்கு நஷ்டம் வரத்தான் செய்யும். நஷ்டத்தோடே ஆவிக்குரிய காரியங்களைத் தேடினால், நித்திய ஜீவன் நமக்கு உண்டு என்று இயேசு சொல்கிறார்.

இந்த தண்டனையைப் பற்றி சொல்லும் போது, வசனத்தை கவனிப்போம். **மத்தேயு 25:41**, 'அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்." என்பார். நன்றாக, தெளிவாய் தெரிந்து கொண்டீர்களா? இயேசு அழகாய் சொல்கிறார்; எந்த மனிதனையும் நரகத்தில் போட அவருக்க விருப்பமில்லை. ஏன் அவருக்கு விருப்பமில்லை? அவர் நித்திய நரகத்தை பிசாசிற்காகவும், அவன் தூதருக்காகவும் தான் ஆயத்தம் பண்ணியிருக்கிறார். நம்மை பரலோகம் அழைத்துச் சென்று நித்திய வெகுமதியை கொடுக்க அவர் ஆசைப்படும் போது, பிறகு ஏன் நம்மை நரகத்திலே தண்டிப்பேன் என்கிறார். உலக காரியங்களுக்காக, தேவனுடைய காரியங்களை உதாசினம் செய்வதால் தான்.

வேலைக்குப் போனால் தான் குடும்பத்தை நல்ல நிலைக்கு கொண்டு வர முடியும். அதனால் அதற்கு முக்கியத்தும் கொடுங்கள். அதற்காக வேலைக்கு போக வேண்டாம், நல்ல படிப்பு படிக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அதையும் செய்ய வேண்டும்; அதை செய்து கொண்டே இருக்கும் பொழுது தேவனுடைய காரியங்களில் ஈடுபடுங்கள். இன்றைக்கு, வாரத்தின் இடைப்பட்ட நாள் பைபிள் ஸ்டடிக்கு வா என்றால் வர வேண்டும். பொதுவாக ஞாயிற்றுக் கிழமைகளில் திருச்சபைகளில் பெரிய கூட்டம் கூடிஇருக்கும்; வாரத்தின் இடைப்பட்ட நாளில் பைபிள் ஸ்டடி,



ஜெபக் கூட்டம் வைத்தால் அது அநேகருக்கு தேவையில்லாதது போல் இருக்கிறது. அதை கேட்டும் உதாசீனப்படுத்துபவர்களுக்கு ஒரு பயங்கரமான எச்சரிக்கையை தேவன் தருகிறார். நீங்கள் டாக்டராகவோ, இஞ்சினியராகவோ, பெரிய ஆளாகவோ இருக்கலாம். நீங்கள் யாராக இருந்தாலும் உங்களுக்கு ஜீவனையும், சுவாசத்தையும் தருகிறவர் தேவன் என்று அறிந்து, நீங்கள் அவர் மேல நம்பிக்கையுள்ளவர்களாக இருந்தால், ஒவ்வொரு முறையும் சபை கூடிவருதலை விட்டுவிடாமல் இருங்கள்.

ஒரு பொறுப்புள்ள அதிகாரி ஒரு காரியத்திற்கு உங்களை அழைத்தால், நான் தான் முன்னால் நின்று செய்ய வேண்டுமென்று ஓடுவீர்கள் பார்த்தீர்களா? அதைப் போலவே தேவனுடைய காரியத்திற்கும் உடனே ஓடி வரவேண்டும். ஏனென்றால், தன்னுடைய பிள்ளைகளை தன்னோடே இருக்க வேண்டுமென்று விரும்பி தேவன் இந்த காரியங்களை செய்ய வைக்கிறார். பிசாசானவனோ, நியாயமான காரியங்களைச் சொல்லி தேவனுடைய காரியங்களில் நாம் ஈடுபடாதபடி நம்மை தடுக்கிறான். அது நம்முடைய வேலையாயிருக்கலாம், உறவாயிருக்கலாம், படிப்பாகவோ, சூழ்நிலைகளாகவோ இருக்கலாம். இது, பிசாசு நம்மை தந்திரமாய் தேவனிடமிருந்து பிரிக்கிறான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்துகொண்டால், பிசாசு போக வேண்டிய இடத்திற்கு நாம் போகாமல் கவனமாயிருந்து, தப்பித்துக் கொள்ளலாம்.

**நரகம் என்பது பிசாசுக்காகவும், அவன் கூட்டத்திற்காகவும் ஒழுங்க பண்ணப்பட்டது**. உலகமும், உலகத்தைச் சார்ந்ததும் பிசாசினால் உண்டானது என்று வேதம் சொல்லுகிறது. சபையும், பரலோகமும் தேவனைச் சார்ந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் உலகத்தில் வாழும்போது பிசாசு நம்மை வழி நடத்துகிற உலகத்தின் மேல் நாட்டம் வைக்காமல், தேவன் காட்டுகிற ஆவிக்குரிய விஷயத்தில் வலிய சென்று நாட்டம் வைத்து, நித்திய வெகுமதியாகிய நித்திய ஜீவனை பெற்றுக் கொண்டு, நாம் ஆசீர்வாதமான வாழ்க்கை வாழ இந்த பூமியிலே நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள தேவன் நமக்கு ஞானமும், கிருபையும் கட்டளையிடுவாராக.

---

இப்பகுதியில் எங்களுடன் தொடர்பு கொள்ள :